செ.வெ.எண். 06/செப்டம்பர் தேதி : 02.09.2016

**தருமபுரி மாவட்டம், வி.ஜெட்டிஅள்ளி கிராமத்தில் நடைபெற்ற அம்மா திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**






தருமபுரி மாவட்டம், வி.ஜெட்டிஅள்ளி கிராமத்தில் இன்று (02.09.2016) நடைபெற்ற அம்மா திட்ட முகாமில் பொதுமக்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பெற்றுக்கொண்டு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்து 23 நபர்களுக்கும், முதியோர் ஓய்வூதிய உதவி தொகை 12 நபர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக சுகாதார துறையின் சார்பில் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குவதை பார்வையிட்டு, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் குறித்த துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, வட்டாட்சியர் திரு. ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சின்னதம்பி, வருவாய் ஆய்வாளர் திரு. பாலகிருஷ்ணன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.